வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்

அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ

63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வண்ணப் புகைப்படங்களுக்கும் வீடியோ படப்பிடிப்புக்கும் என்றும் நாடுங்கள்

அஜந்தா போட்டோ அன்ட் வீடியோ

63, சங்கிலியன் வீதி, நல்லூர்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (26 04 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 149

# வவுனியாவில் ராணுவ நடவடிக்கை நேற்று ஆரம்பமானதாக அறிவிப்பு!

## தளபதி ஜெரி நேரடியாக களத்தில் நிற்கின்றாராம்

கொழும்பு. ஏப்ரல் 26

வவுனியா மாவட்டத்தில் "ஜெயமஹா" என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்காப் படைகள் நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்ததாக கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா நேரடியாக – களத்தின் முன்னணியில் – இருந்து இந்த நடவடிக்கைக்கான வழிகாட்டலை மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை விஸ்தரிக்கவும்–

வவுனியாவில் நெல் விளையும் பிரதேசங்களின் ஒரு பகுதியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் –

படையினர் இந்த நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

புதிய பாதுகாப்பு முன்னணி நிலைகளுக்கு இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா விஜயம் செய்ததாகவும் –

அங்கு விவசாயக் குடும்பங்களுடன் தொடர்ச்சியான கூட்டங்களை அவர் நடத்தியதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையின் விவரம் குறித்து மேலதிக விவரங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (உ-எ 5)

### வடபகுதிக்குச் செல்லவிருக்கும்

## சமாதானத் தூதுக் குழுக்களை அதைரியப்படுத்த முயற்சி!

### வண. அஸாஜி தேரர் கவலை

கொழும்பு, ஏப். 26

வடபகுதி செல்லவிருக்கும் சமாதானக் குழுக்களை அதைரியப்படுத்தும் நடவடிக்கைகளில் கொழும்பில் சிலர் ஈடுபட்டு வருவதாக, மதங்களுக்கு இடையிலான சமாதான அமைப்பின் ஒன்றிணைப்பின் செயலாளரான வண. மாதம்பாகம அஸாஜி தேரர் தெரிவித்திருக்கிறார்.

இலங்கை மக்களில் பெரும்பான்மையோர் நாட்டில் சமாதானம் ஏற்படுவதையே விரும்புகின்றனர் என்றும் –

அச்சமாதானத்தைக் கொண்டு வருவதற்குக் குந்தகம் விளைவிப்பது அநியாயமான செயல் என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

சமாதானக் குழுவின் முதற்பணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதே என்றும் அஸாஜி தேரர் சொன்னார்.

யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்கு முன்வருமாறு தாம் விடுத்த அழைப்பை ஏற்று நானூறுக்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் யாழ். செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் –

எனினும் சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக ஒரு சிறிய குழுவே யாழ். செல்லமுடியும் என்றும் –

அந்தக் குழுவில் கிறிஸ்தவ, இந்து மதகுருமார் உட்பட அனைத்துத் தரப்பினரும் அங்கம் வகிப்பர் என்றும் – அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ-3)

### அடுத்த பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில்

## தோற்கப் போகும் அரசுக்காக நமது தலையைக் கொடுப்பதா?

### சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகள் மத்தியில் இப்படிக் கேள்வி

அடுத்த பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் தோற்கப் போகும் ஓர் அரசியல் கட்சிக்கு 'ஏன் நமது தலையைக் கொடுக்க வேண்டும்?". என்ற மனோபாவம், தென் மாகாண சபைத் தேர்தலின் பின்னர் சிரேஷ்ட அரச அதிகாரிகள் மற்றும் முன்னணி வர்த்தகர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புத்துறை மற்றும் முப்படைகளில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும் இந்த மனோபாவத்தைக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இம் மனோபாவத்தைக் கொண்டுள்ள அதிகாரிகளும் வர்த்தகப் பிரமுகர்களும் நாடாளுமன்ற எதிரணி உறுப்பினர்களுடன் தமது தொடர்புகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வேறு சிலர், குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி அரசுக்கு உதவுவதைத் தவிர்ப்பது என்று தீர்மானித்துள்ளனராம்.

யுத்தம் ஒன்றில் ஈடுபட்டுள்ள அரசாங்கம் ஒன்றுக்கு இப்படியான நிலை ஏற்படுவது ஆபத்தானதாகும் என்று கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

### ஆசிரியர்களை நியமிக்கும் விடயத்தில்

## மாகாணசபை அதிகாரத்தை பறிக்க மத்திய அரசு முயற்சி!

### ஆளுநர் சர்வானந்தா குற்றம் சாட்டுகிறார்

மாகாணசபையின் அதிகாரங்களைப் பறித்தெடுக்கும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் திரு. எஸ். சர்வானந்தா குற்றஞ் சாட்டியுள்ளார்.

மாகாண சபையின் கீழ் உள்ள பாடசாலைகளுக்கு கணையியல் மற்றும் விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர்களை நியமிக்க கல்விச் சேவைகள் சபை விண்ணப்பங்கள் கோரியுள்ளது அதிகாரவரம்பு மீறல் ஆகும் என்றும் –

ஆளுநர் சர்வானந்தா தெரிவித்துள்ளார்.

இதனை ஆளுநர் சர்வானந்தாவின் பணிப்பின் பேரில், அவரின் செயலாளர் எம். இராசநாயகம், அரச சேவை ஆணைக்குழுவின் மத்திய கல்விச் சேவை சபையின் செயலாளர் ஏ. எஸ். வீரரத்தினாவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள சிங்கள மற்றும் தமிழ்மொழி மூலமான தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுவதாக கல்விச் சேவைச் சபையின் விளம்பரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மாகாண சபையின் கல்விப் பொதுச் சேவையின் கீழ் வரும் பாடசாலைகளுக்கும் சேர்த்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பது அதிகார வரம்பு மீறிய செயலாகும் என்றும் அரசமைப்புக்கு முரணானது என்றும் ஆளுநரின் ... பப்பட்ட ஆட்சேபக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

### கிழக்கில் 'வெள்ளைக் கழுகு'

கொழும்பு, ஏப் 26

கிழக்கு மாகாணத்தில் "வைற் ஈகில்" (வெள்ளைக் கழுகு என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டது. (உ-5)

### இன்று கிளாலி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 26

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-5)

### தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம்' ஏப். 26

மட்டக்களப்பு பாலம் போட்டமடுப் பகுதியில் வைத்து — கடந்த 22 ஆம் திகதி முற்பகல் 9 மணியளவில் — பொலீஸ் அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழர் ஒருவர் உயிரிழந்தார்.

கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த சின்னத்தம்பி மூத்ததம்பி (வயது 21) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

திருமலை மாவட்டம் மூதூரில் உள்ள 59 ஆம் கட்டையில் கடந்த 21 ஆம் திகதி இரவுவேளை ரோந்து சென்ற படையினர் 52 வயதான தமிழர் ஒருவரை சுட்டுக்கொன்றனர். (உ-5)

### முச்சந்தி முரளி



சேடம் இழுக்கிற அரசு எண்டது அவையளுக்கு நல்லா விளங்கிப் போச்சுது போலை......!

## இராணுவம் – பொலீஸ் முந்தலில் மோதல்

சிலாபம் மாவட்டம் முந்தலில் கடந்த சனியன்று இடம் பெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்த பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது இம்மோதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இராணுவச் சிப்பாய் ஒருவர் படுகாயத்துக்குள்ளானார்.

மரணமடைந்த பொலீஸ் கான்ஸ்டபிள் எச். எம் பண்டார முந்தல் பொலீஸைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து சிலாபம், முந்தல் பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (உ-எ-6)

## 6 ஆயிரம் ஈழத்தமிழர் சுவிஸில் தங்க அனுமதி

சுவிட்ஸர்லாந்தில் நான்கு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வரும் சுமார் ஆறாயிரம் இலங்கைத் தமிழர்கள் அங்கு தொடர்ந்து தங்கியிருக்க அனுமதிக்கப் படுவார்கள்.

இவ்வாறு சுவிட்ஸர்லாந்து ... சுவிட்ஸர்லாந்தில் ... 12 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் புகலிடம் கோரி விண்ணப்பித்துவிட்டு, முடிவுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் 12 ஆயிரம் பேரில் ஒரு பகுதியினரையே சுவிஸ் அரசு அடுத்த மாதம் முதல் கட்டம் கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பவிருக்கிறது. (உ-எ-9)

### செல்வா நினைவுத் தூபிக்கு இன்று மக்கள் மலரஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 26

தந்தை செல்வநாயகத்தின் பதினேழாவது நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி யாழ் மாநகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி செலுத்தும் வைபவம் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறும்.

துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவநெறிப்புரவலர் கலாநிதி ச. கனகராசா ஆகியோர் மலரஞ்சலியை ஆரம்பித்து வைப்பர்.

அவர்களைத் தொடர்ந்து மற்றும் பலர் தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மல

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முன்னைய உத்தரவு மே 15 இல் காலாவதியாகிறது

## புலிகள் மீதான தடையை நீடிக்க இந்தியா தயக்கம்?

### புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் சந்தேகம்

சென்னை, ஏப். 26

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான இரண்டு ஆண்டு காலத் தடை அடுத்த மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இத் தடையை மேலும் நீடிப்பது பற்றி முடிவு செய்ய, அது தொடர்பாக மத்திய அரசினால் நியமிக்கப்பட்டிருக்கும் நடுவர் குழு மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு கூட்டப்பட வேண்டியுள்ளது.

இந்த நிலையில் —

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதா என்ற விஷயம் குறித்து மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து மோதல் நடுவர் குழு கூட்டப்படுமா, விடுதலைப் புலிகள் மீதான தடை மேலும் நீடிக்கப்படுமா, என்பதை கேள்விக்குரியதாக்கி இருப்பதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நடுவர் குழுவைக் கூட்ட வேண்டிய பொறுப்பில் உள்ள மத்திய அரசு, உரிய ஆதாரங்களை தமிழக அரசு சமர்ப்பித்தால் மட்டுமே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பது பற்றி நடுவர் குழு முடிவு எடுக்கும் என்று கூறியிருப்பது நடுவர் குழு எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு கூட்டப்படமாட்டாது என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் கூறியுள்ளன.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானும் புதுடில்லி ராஜ்யசபாவில் பேசுகையில் —

விடுதலைப் புலிகள் மீதான தடை விஷயம் இவ்வளவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்கரைப் பாதுகாப்புக்கு தமிழகத்தில் தனிப்படை!

### முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு

கடல் வழியாகத் தமிழ் நாட்டினுள் அந்நியர் நுழைவதையும் கள்ளக் கடத்தல் குற்றங்கள் இடம் பெறுவதையும் தடுப்பதற்காகவும் —

மீனவர்களுக்கு உதவுவதற்காகவும் —

தனியான கடற்கரைப் பாதுகாப்புப் படை ஒன்றை ஏற்படுத்துவது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழக பொலீஸ் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்துக்கு பதிலளித்து சட்ட சபையில் பேசும் போது முதலமைச்சர் ஜெயலலிதா முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

"எமது கடற்பகுதியைப் பாதுகாக்கும் நோக்கத்தில் புதிய படை அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் கீழ் கடற்கரைப் பகுதிகளில் சோதனைச் சாவடிகளும் ரோந்துப்படைப் பிரிவுகளும் அமைக்கப்படவுள்ளன.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஏப். 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி முன்மாரியில் உள்ள வத்தியாமடு என்னும் இடத்தை கடந்த 19 ஆம் திகதி அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தியபோது விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதாவாளர் வெள்ளைக்குட்டி வேலுப்பிள்ளை (அம்பாறை) என்பவர் வீரச்சாவடைந்தார். (உ-5)

### கொழும்பு பல்கலை துணைவேந்தர்

## பதவியில் இருந்த போதே பீரிஸ் சு. கவுடன் தொடர்பு

### அவரே ஒப்புக் கொள்கிறார்

கொழும்புப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்துகொண்டே தாம் சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக செயற்பட்டு வந்ததாக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஒப்புக் கொண்டார்.

தென் மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடைந்த வெற்றிக்கும், துணைவேந்தர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு சுதந்திரக் கட்சியில் தாம் சேர்ந்ததற்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் கூறிய அவர், தென்மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னரே சுதந்திரக் கட்சிக்கு தாம் ஆலோசனை வழங்கி வந்ததாகவும் குறிப்பிட்டார்.

## கொழும்பில் கைதானோர் காலி, களுத்துறையில்!

### தடுத்து வைக்கப்பட்டுள்ளனராம்

கொழும்பு, ஏப். 26

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் அண்மையில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் காலியில் உள்ள குற்றத் தடுப்புப் பிரிவின் 6 ஆம் மாடியிலும், லோஸ் மன் பிலேசில் உள்ள பொலீஸ் நிலையத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

### கொழும்பில் கைதாகும்

## தமிழ் இளைஞர்களிடமிருந்து தந்திரமாகப் பணம் பறிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 26

தமிழ் இளைஞர்களிடம் தந்திரமான வழிகளில் பணம் பறிக்கும் வேலையில் கொழும்பில் உள்ள விடுதிகளின் உரிமையாளர்கள் சிலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சோதனையிடப்படும் சம்பவங்கள் தற்போது நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான கைது நடவடிக்கைகளில் விடுதிகளில் தங்கியுள்ள இளைஞர்கள் அகப்படும் போது பொலீஸாரிடமிருந்து அவர்களை விடுவித்துத் தருவதாகக் கூறும் விடுதி உரிமையாளர்கள், கைதானவரின் உறவினரிடம் இருந்து பணம் பெற்று வருகின்றனர்.

அதேசமயம் —

பொலீஸார் விடுதிகளில் நுழைந்து சோதனையிடும் போது விடுதி உரிமையாளர்கள் பொய்க் குற்றச்சாட்டுக்களை கூறி கைது நடவடிக்கைகளுக்கு உதவி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதனால் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்


### கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் 16 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30502)

### பேட்டுக் குஞ்சு விற்பனை

லைறவன் பிறவுண் 1½ மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (30501)

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம், சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (7324)

### மணமகன் தேவை

38 வயது, விசாகம் 3ஆம் பாதம், இரகபாவம் 55, ஜேர்மனி விஸா யாழ் உள்ளவருக்கு அழகிய, படித்த பெண் தேவை. ப. பராசசிங்கம், கோண்டாவில் றோட், கோப்பாய் தெற்கு. (30546)

### SPOKEN ENGLISH

Pax Britannica Dominus Litera, Spoken English with Grammar [Lecturer V. N. Kandasamy. Beginning 27-4-94 87, Thirunelveli Road. (Near Rail Tract) Kokuvil. (7343)

### திருமண சேவை

உள்ளூர், வெளியூர் மணமகன், மணமகள் ஜாதகம் இருப்பவர்கள் தொடர்பு கொள்க, அபிராமி, துர்க்கா தேவி தேவஸ்தான வீதி, சாவகச்சேரி. (30568)



மூளாய்

## வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## பட்டமளித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்

மேற்படி தேவஸ்தானத்தில் 13 நாள் மஹோற்சவத்தில் தெய்வீக "மகாபாரதம்" என்னும் அருட்தொடர் சொற்பொழிவு ஆற்றிய மூளாய் தந்த மைந்தன் "அருள் மொழி அரசு, கானகதாலாநிதி"

பிரம்மஸ்ரீ சிவ வை நித்தியானந்தசர்மா

அவர்களை உபயகாரர், பரிபாலன சபையினர், பொது மக்கள் சார்பில் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினர் கௌரவித்து சைவத் தமிழ் தேனமுதோன் எனும் சிறப்புப்பட்டம் சூட்டி பொன்னாடைபோர்த்தி பொற்கிளி வழங்கி, கௌரவிக்கும் நிகழ்வு மேற்படி ஆலய மண்டபத்தில் மஹோற்சவ இறுதி நாளாகிய பூங்காவனத்தன்று 26 – 04 – 94 செவ்வாய்க்கிழமை பி. ப. 7 மணிக்கு நடைபெறும்.

இப் புண்ணிய நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது"

— பரிபாலனசபை

(30606)



## புதிய உயர் கல்லூரி

## A/L 96

பிரிவு II

ஆரம்பம்: 30-04-1994

(காலை 7 மணி)

உங்கள் அனுமதிகளை இன்றே முன் பெற்றுக் கொள்ளவும்.

(சி-8033)



## LONDON EXAMS
## NOV DEC. 94

COURSE FEES

| | | |
|---|---|---|
| C. I. M A. | (Stage-1) | 2,500/- |
| I. A. B. | (Foundation) | 600/- |
| I. A. B. | (Intermediate) | 700/- |
| I. A. B. | (Final) | 800/- |

● விரிவுரையாளர்கள்;

சத்தியதாஸ், இராம்பூர்ணன், சிவபாதசுந்தரம் கேசவன்

ஆரம்பம்: 30-04-1994

COMPUTER BASIC, LOTUS 1 – 2 – 3
SHORT HAND & TYPING வகுப்புகள் நடைபெறுகின்றன.

★ குறைந்த கட்டணம்
★ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET,
JAFFNA.

[C-7929]



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். கோட்டம்

சகல

பொதுச் சபை உறுப்பினர்களுக்குமான

## அறிவித்தல்

எதிர்வரும் புதன்கிழமை (27 - 04 - 94) மாலை 4 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் (எழிலகம் முன்பாக) பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. பல முக்கிய விடயங்கள் ஆலோசிக்கப்பட இருப்பதனால் கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

★ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

செயலாளர்
யாழ் கோட்டம்

(சி-7930)


# கண்டல் காடுகளை அழித்தல் உடன் தவிர்த்தல் வேண்டும்

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆற்று நீரும், கடல்நீரும் கலக்கும் கடல் நீரேரியை அண்டிய பகுதிகள் கண்டல் காடுகளின் சூழலாகும். சூழலியல் நோக்கில் மட்டுமன்றி பொருளாதார உயிரியல் நோக்கில் இச்சூழல் தொகுதி முக்கியபங்கு வகிக்கின்றது.

எனினும் யாழ். குடாநாட்டிற்கான தரைப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு வன்னிப் பிரதேசத்திலிருந்து விறகு எடுத்து வரமுடியாத ஒரு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது எனவே யாழ். குடாநாட்டின் சகல பகுதிகளிலிருந்து விறகு வெட்டுபவர்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு இப்பகுதியை முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

யாழ் குடாநாட்டின் வடமராட்சி கடல் நீரேரப்பகுதி மற்றும் இனாலி, கேரதீவு, மண்டைதீவு, கண்டிக்குளம் ஆனையிறவு கடல் நீரேரிப்பகுதிகளில் இக்காடுகள் கணிசமான அளவு காணப்படுகின்றன. இதனைவிட அராலி, பொன்னாலைப் பகுதிகளிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக காணப்படுகின்றது.

ஆனால் அண்மைக்காலத்தில் இக்கண்டல் காடுகளின் முக்கியத்துவத்தை உணராத விறகு வெட்டுபவர்கள் தமது உடனடித் தேவையை மட்டும் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் பயன் தரக்கூடிய இவ்வினத் தாவரங்களை வெட்டி அழித்தல் மனவருத்தத்திற்குரியது.

பொதுவாக சதுப்பு நிலத் தரையில் தொடர்ச்சியாக நீர்தேங்கும் சூழலில் தான் இத்தாவரங்கள் காணப்படுகின்றன. அவற்றின் சிறப்பியல்களாவன.

★ சேற்று மணலில் சரிந்து போகாது இருப்பதற்கு தாங்கும் வேர்களையும் மிண்டிவேர்களையும் கொண்டவை.

★ சுவாசித்தலில் உள்ள இடையூறினை நிவர்த்தி செய்ய தரைக்கு மேலே குத்தி நிற்கும் மூச்சுவேர்களைக் கொண்டுள்ளன.

★ தாய்த்தாவரத்தில் பழங்கள் இருக்கும் போதே வித்துக்கள் முளைத்து மற்றத் தாவரத்தை தோற்றுவிக்கக் கூடியதாகவும் உள்ளன.

இவ்வாறு தனது வாழ்விடத்தில் தோன்றும் பிரச்சினைகளை சமாளிக்கும் இக்கண்டற் காடுகளுக்கு மனிதனால் ஏற்படுத்தப்படும் பிரச்சினையை சமாளிக்க இயலவில்லை.

இக்கண்டற் காடுகளின் நன்மைகளாவன!

★ கடல் அலையால் தோற்றுவிக்கப்படும் மண்ணரிப்பைத் தடுக்கிறது.

★ மனிதனது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

★ வலைகளுக்கு சாயம் பூசவும் அவை உக்காது இருக்கவும் பயன்படுகிறது.

★ மீன் பிடி உபகரணங்களை (கப்பல் பலகை, மீன்பிடி கப்பு) செய்ய உதவுகிறது.

★ பசளைகளாக பயன்படுத்தப்படுகிறது.

★ பறவைகளுக்கு இயற்கை சரணாலயமாக பயன்படுகிறது.

★ இறால் பெருக்கத்துக்கு பயன்படுகிறது.

எனவே இவ்வாறான பல பயனுள்ள இக்கண்டல் காடுகள் அழிக்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும் — இவ்வாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது (எ)

# குழந்தைகளுக்கான நூல்களை அறிஞர்கள் படைக்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 26

"அறிஞர்களும் எழுத்தாளர்களும் ஆய்வு நூல்களை மட்டுமன்றி குழந்தைகளுக்கான கதை நூல்களையும் படைக்கவேண்டும். மாணவர்கள் பாட நூல்களுக்கு மேலாக எதை வாசிக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்துவதன் மூலம் அவர்களது உள்ளத்தை ஆக்கப் பணிகளுக்குத் திருப்ப முடியும்".

ஆத்மஜோதி முத்தையாவுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவிலும் அவரது "மாணவர்களுக்கேற்ற மாண்புறு கதைகள்" நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டு உரையாற்றிய விரிவுரையாளர் திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

மாவை ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் தலைமையில் நல்லை ஆதீனத்தில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் மேலும் பேசும் போது கூறியதாவது:

காட்சிப் பொருளாக இருக்கும் கடவுளை கருத்துப் பொருளாகக் காட்டும் சமய உணர்வுகளைக் கூறும் முயற்சியாக அமைந்த இந்த நூல் சமூகம் சிறந்த சமூகமாக சமயத்தின் தத்துவங்களை அறிவிக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் உரைநிகழ்த்திய போது கூறியதாவது:

"மாறிவரும் இன்றைய சூழலில் இளைய தமிழ் இதுபோன்ற அறிவுக் கதைகளின் அவசியத்தைத் தெரிந்து கொண்டு மாணவர்களுக்கு உகந்தவாறு சமயக் கருத்துகளை கதைகளின் மூலம் சிந்தனைக்குத் தந்துள்ளார். ஆத்மஜோதி முத்தையா இதுபோன்று சமய தத்துவங்களை விளக்கும் நூல்கள் பல வெளிவர வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் நூலை வெளியீட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.

ஆசிரியர் ஆத்மஜோதி முத்தையா, செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

ஆத்மஜோதி முத்தையாவுக்கு யாழ். செயலக கணக்காளர் திரு எஸ். சிவபாலன் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

மாணவர்களுக்கேற்ற மாண்புறு கதைகள் நூலின் முதல் பிரதியை கலாநிதி கோபாலகிருஷ்ணனிடம் இருந்து திருதுவாரகன் பெற்றுக் கொண்டார்.

நூல் வெளியீட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை நல்லூர் மறுமலர்ச்சிக் கழகம், நல்லூர் ஞானபண்டிதர் கழகம், நல்லூர் ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம் என்பன செய்திருந்தன. (க-111)

# சமூக மாற்றத்துக்கு பெண்கள் கல்வி முக்கியம்

## கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஏப். 26

'சமூக மாற்றத்துக்குப் பெண்கள் கல்வி முக்கியமானது. வறுமை பெண்களின் கல்வியைப் பாதிக்கின்றது. கல்வி பெறுவதில் பெண்களுக்கிருக்கும் தடைகளைச் சமாளிப்பது எம்மை எதிர் நோக்கும் பாரிய பணியாகும்.'

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவன இயக்குநர் திரு ஆ. சிவலிங்கராசா ஒழுங்கு செய்த கருத்தரங்கில் "பெண் கல்வியும் வறுமையும் - வளர்முக நாடுகளின் அனுபவம்" எனும் பொருளில் உரை நிகழ்த்திய யாழ். பல்கலைக் கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி இவ்வாறு கூறினார்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. சின்னத்தம்பி மேலும் பேசுகையில் கூறியதாவது!

"பெண்கள் குடும்பத் தலைவர்களாக மாறி வருகிறார்கள். ஆனால் தொடர்ந்தும் முக்கியமான தீர்மானங்களில் பெண்களுக்குப் பங்கு இல்லாமலே இருக்கிறது.

பெண்களுக்கு எதிரான பாகுபாடு பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது. சமமான வேலைக்கு சமமான சம்பளம் இன்னும் வழங்கப்படுவதில்லை. குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் இந்த நிலைமை காணப்படுகிறது.

தற்பொழுது மூன்றாவது உலக நாடுகளில் தோன்றியுள்ள ஏற்றுமதி வர்த்தக வலயங்களில் குறைந்த ஊதியம் வழங்கிப் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

இதனால் விபசாரம் முதலிய முறைசாரா துறைகளில் பெண்கள் ஈடுபடுகின்றார்கள் என்றார். அவர்.

கருத்தரங்கில் பேராசிரியர் பாலகிருஷ்ணன், பேராசிரியர் சண்முகதாஸ், கவிஞர் சோ. பத்மநாதன் உட்பட்ட பலர் இவ்விடயம் பற்றிக் கருத்துகளைத் தெரிவித்தனர்.

## ஆசிரியர்களுக்கு பிரயாண ஒழுங்கு

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி கல்விக் கழக ஆசிரியர்கள் — இன்று வழமைபோல் படகுச்சேவை நடைபெறுமாயின் — கல்விக் கழக அலுவலகத்திற்கு நண்பகல் 12 மணிக்கு முன்னர் வருவதால் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படுமென கல்விக் கழக பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [உ]


உரும்பராய் கிழக்கு, கோப்பாய், நீர்வேலி

திருக்கரந்தனூர் அருள்மிகு

## சிவபூதநாதேஸ்வர சுவாமி தேவஸ்தான

## ★ மகோற்சவம் ★

சிவபூதநாதேஸ்வர சுவாமி தேவஸ்தான மகோற்சவம் இன்று முதல் தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறும்.

| | |
|---|---|
| கொடியேற்றம்:- | இன்று காலை 10 மணி |
| தேர்த்திருவிழா:- | மே மாதம் 9 ஆம் திகதி காலை 10 மணி |
| தீர்த்தோற்சவம்:- | மே மாதம் 10 ஆம் திகதி காலை 10 மணி |

உற்சவகாலத்தில் தினமும் இரவு 8.15 முதல் 9.30 வரை

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்

செஞ்சொற் சீராளன் த. சிவகுமாரன்

[illegible] வார்

— தேவஸ்தான பரிபாலன சபை

(30607)


## விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்தபல்கலைக் கழகத்தில் கல்வி ஆண்டு 94/95 இற்கான உயர் தொழில் ஆங்கிலம் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். பிராந்திய நிலையத்தில் விநியோகிக்கப்படுவதாகவும்—

எதிர்வரும் வியாழக்கிழமை வரை ரூபா 50 ஐ செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும்—

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் யாழ். பிராந்திய இயக்குநர் தெரிவித்துள்ளார்.


உங்கள் வளமான எதிர்காலத்திற்கு உறுதியான அத்திவாரம்

## தமிழில் ஆங்கில இலக்கணம்

EASY ENGLISH GRAMMAR

தமிழறிவு படைத்த எவரும் இப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் ஆங்கில மொழி அறிவை எளிதில் பெறலாம்;

மாணவர்களுக்கு பயன் தரும் நல்லதொரு தமிழ் நூல்

108 பக்கங்கள் விலை ரூபா 65/-

பதிப்பாளர்,
சிவா அச்சகம், கைதடி.

[7334]



வடலியடைப்பு கும்மந்தவத்தை

## ஞான வயிரவர் ஆலயம் மண்டலாபிஷேகம்

இன்று 9 ஆம் நாள் நிகழ்வு
26 – 04 – 1994 மாலை 6-30 மணி

இன்னிசைச் சொற்பொழிவு:

அகில இலங்கை கம்பன் கழக உறுப்பினர்

M. S. ஸ்ரீதயாளன்
B. A. Dip in Education

விடயம்: இறை நம்பிக்கை

[30597] 9ஆம் நாள் உபயகாரர்,



## பூப்புனித நீராட்டு விழா

எமது செல்வப் புத்திரி

வித்யாழினிக்கு

நிகழும் சித்திரை மாதம் 14ஆம் நாள் நாளை [27-04-94] புதன்கிழமை காலை 7-30 முதல் 11 மணி வரையுள்ள சுபவேளையில் நடத்த நிச்சயித்திருப்பதால் அனைவரையும் குடும்ப சமேதராய் சமுகம் தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நடைபெறும் இடம்:

V. கிருஷ்ணபிள்ளை
(வேலுப்பிள்ளை)
23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்;
திரு. திருமதி. S. K. மகாலிங்கம் குடும்பத்தினர்.

ஆனைக்கோட்டை. (30593)



தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
(மருதனார்மடம் கல்விக் கோட்டம்)

## பொதுச்சபைக்கூட்டம்

இடம் :- இணுவில் இந்துக் கல்லூரி
காலம் :- 27 - 4 - 94 மாலை 4.30 மணி
விடயம் :- (அ) மேதினம் பற்றிய கருத்துரையாடல்
(ஆ) கல்வி நிலையங்கள் சார்பான முக்கிய விடயங்களும் முடிவுகளும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு அங்கத்தவர்களும் கலந்து கொள்கின்றனர்.

[7081] செயலாளர்.



"அழைத்தவர் குரலுக்கு வருவேன்" என்றான் கீதையிலே கண்ணன்

மன்னிக்கவும்!

இங்கு நீங்கள்தான் வரவேண்டும்!!

## கண்ணன் கீதை

(பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் விற்பனையாளர்கள்)

ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி/7933)



## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

## பொது நிர்வாக சபைக் கூட்டம்

சகல கோட்ட நிர்வாக உறுப்பினர்களுக்கான

## அறிவித்தல்

எதிர் வரும் புதன்கிழமை 27 - 04 - 94 பிற்பகல் 2.00 மணிக்கு புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் (எழிலகம் முன்பாக) நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற உள்ளது. தனியார் கல்வி நிறுவன ஒழுங்கு விதிகள் தொடர்பான ஆலோசனைகள் இடம்பெற இருப்பதனால் சகல நிர்வாக உறுப்பினர்களையும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி/7931)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
172/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தமிழர் நாடு நிதர்சனமாக...

'தேசிய இனங்களுக்குரிய இலக்கணத்தால் தமிழரும் சிங்களவரும் இன்றும் இரு வேறு இனங்களே. அவர்கள் சரித்திரத்தால், தேசத்தால், மொழியால், சமயத்தால், கலாசார பண்பாட்டால், மரபுகளால் வேறுபட்ட இனங்களே'

இவ்வாறு நாற்பது வருடங்களுக்கு முன்னர் அடித்துக் கூறியவர் யாராக இருக்கலாம்?

—எமது முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென ஒரு தனியரசை வைத்திருந்தனர். நாம் இப்போது கோருவது பிரிவினையல்ல. எங்கள் அரசுரிமையை மீளப்பெறவே போராடுகின்றோம்—

என்று தாம் இறப்பதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னர் தமது கருத்தை, அரசியல் நிலைப்பாட்டை வலியுறுத்திய தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகமே முதலில் காணப்படும் உண்மையையும் எடுத்துரைத்திருந்தார்.

தமிழர்கள் தங்கள் தனித்துவத்தையும், ஆட்சி உரிமையையும் உணர்ந்து சுதந்திரமாகம் கொள்வதற்கு அப்போது உந்து சக்தியாக விளங்கியவர் தந்தை செல்வநாயகம் என்றால் மிகையாகாது. அவரது பதினேழாவது அமரதினம் இன்றாகும். எஸ். ஜே. வி. அவர்கள் தமிழர்கள் சுதந்திரம் அடையவேண்டும்; தமக்கெனத் தனி அரசமைக்க வேண்டும்; அதற்காகப் போராடவேண்டும் என்பதில் தனது இறுதி மூச்சிருக்கும்வரை உறுதி குலையாதவராகவும், நம்பிக்கை இழக்காதவராகவும் விளங்கினார்.

நாம் பிரிந்து செல்வதென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். நாங்கள் பிரிந்து சென்றுவிட்டால் எங்கள் இழந்த உரிமைகளை ஒரு போதுமே மீட்க முடியாது. ஒரு தனித்தமிழ் நாட்டை உருவாக்க எல்லா வழிகளிலும் போராடுவோம். இது உறுதி!—

...இது கலபமான காரியமல்ல என்பதும் எமக்குத் தெரியும். இது கஷ்டமான பாதை என்பதை உணருகிறோம்: ஆனால் நாங்கள் ஒன்றில் சிங்களவர் ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும். அல்லது அழிந்துவிட வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டு வருகிறோம்—

ஒரு நாள், சிங்கள மக்களும் எங்கள் கோரிக்கைக்கு இணங்கியாக வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும். நாங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து பிரிந்து எங்கள் தமிழீழ நாட்டை அமைத்தே தீருவோம்—

தந்தை செல்வநாயகம் பதினெட்டு வருடங்களுக்கு முன்னர் கூறியதற்கு இன்று செயல் வடிவம் கொடுத்து வருகிறார் தேசியத் தலைவர் பிரபாகரன். தமிழீழ நாட்டை அமைத்தே தீருவது என்பதில் தந்தை செல்வநாயகத்தைப் போல தலைவர் பிரபாகரன் பல்லாயிரம் மடங்கு மன உறுதி கொண்டவராகச் செயற்படுகிறார்.

எந்த இன்னல், இடரின் மத்தியிலும் இலட்சியத்தில் இருந்து விலகுவதில்லை என்ற தளர்விலா உறுதியுடன், சோர்விலா வீரத்தைக் கலந்து பலமாக்கிச் சாதனைகள் படைத்து வருகிறார். எதிரிப்படையை தோல்வியுறச் செய்து, தமிழர்கள் தாமே தமது நாட்டை அமைப்பதற்கு வழி சமைத்து வருகிறார்.

தந்தைக்குப் பின்னால் அணி திரண்ட பின்னர், மக்கள் இப்போது தலைவருக்குப் பின்னால் ஆழியாக அணி திரள்வதைக் காண்கிறோம். அந்த ஆதரவும், பக்கபலமும் வெற்றியாக மலர்வதற்கு தந்தை கூறிய வார்த்தைகளையே மீள ஆசைப்பது பொருத்தமாகும்.

விடுதலை இயக்கத்தில் எல்லோரும் பங்குபற்ற வேண்டும் எவரும் தமக்கு இதில் பங்கில்லை என்று தட்டிக்கழிக்க முடியாது. சுதந்திர இனமாக வாழ்வது எங்கள் எல்லோருக்கும் பொதுவான தார்மீகப் பொறுப்பு—

என்பதனை ஒவ்வொரு தமிழனும் உணர வேண்டும்; உணர்ந்து செயற்பட வேண்டும்; செயற்பட்டால்...

அன்று தந்தை காட்டிய சுதந்திர தாகம் தணிந்து தமிழர் நாடு மலர்வது தலைவர் பிரபாவின் காலத்தில் நிதர்சனமாகும்.

---

தமிழகத்தில் மீண்டும் அரசியல் பரபரப்பு:

# மயிலாப்பூர், பெருந்துறைக்கு மே 26 இல் இடைத் தேர்தல்

சென்னை, ஏப். 26

தமிழகத்தில் மீண்டும் அரசியல் பரபரப்பு சூழ்நிலை ஆரம்பமாகியுள்ளது. மயிலாப்பூர் மற்றும் பெருந்துறை சட்டசபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைத் தேர்தல்களில் அரசியல் கட்சிகளுக்கு இடையே பெரும் போட்டி நிலைமை உருவாகி வருகிறது.

மேற்படி தொகுதிகளுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவது இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகி, அடுத்த மாதம் 3ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

இச் சட்டசபைத் தொகுதிகளின் உறுப்பினர்கள் காலமானதைத் தொடர்ந்து, இந்த இடைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

---

விடுதலைப் புலிகள் விவகாரத்தில் தமிழக அரசு

# மத்திய அரசுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்

## சண்டிகிரார் இணை அமைச்சர் பைலட்

ஹைதராபாத் ஏப். 26

தமிழக [illegible] அரசாங்கத்துக்கு [illegible] மற்ற குற்றச்சாட்டுகளைத் தெரிவிப்பதை நிறுத்திக் கொண்டு மாநிலத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் ஹைதராபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் விஷயத்தில் தமிழக அரசுக்கு உதவ மத்திய அரசு எப்போதும் பின்னடிக்கவே இல்லை என்றும் —

இது தொடர்பாக மத்திய அரசுக்கு எதிராக அ.தி.மு.க. அரசு குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருவது கண்டிக்கத்தக்கது என்றும் இணை அமைச்சர் தெரிவித்தார்.

(ஒ-எ)

## அடையாள அட்டைகள்

கொழும்பிலிருந்து செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்த இரண்டாயிரம் தேசிய அடையாள அட்டைகள் அந்தந்த பிரதேச செயலர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

---

இவ்வாண்டு பட்டம் பெற்ற

# சித்த வைத்தியர்களுக்கு கொழும்பில் உள்ளக பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் பட்டம் பெற்று இவ்வாண்டு வெளியேறிய டாக்டர்களுக்கு கொழும்பில் உள்ளகப்பயிற்சி அளிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் சித்த மருத்துவத்துறையில் இருந்து வெளியேறும் டாக்டர்களுக்கு கொழும்பில் உள்ளகப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்த போதும் — இவ்வாண்டு அந்த வசதி மறுக்கப்பட்டது.

இவ்விடயம் குறித்து கொழும்பில் யாழ். சித்த மருத்துவத்துறை அதிகாரிகள் பேச்சு நடத்தியதன் பலனாக பொறளை, நாவின்ன மருத்துவமனைகளில் பயிற்சி அளிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

(த 3)

---

# பொறியியற் சேவைகள் அமைச்சு பாடசாலைகளைப் புனரமைக்கும்

## மாகாண சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ் இதுவரை இயங்கி வந்த பாடசாலைகளின் திருத்த, நிர்மாண வேலைகளை செய்துவரும் பாடசாலை வேலைகள் பகுதி தற்போது மாகாண சபையின் பொறியியற் சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாடசாலைகள் வேலைகளை நிறைவேற்றுவது தொடர்பாக பொறியியற் சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு. மு. சுப்பிரமணியம் கருத்து தெரிவிக்கையில்—

கல்வி அமைச்சினால் வேலை செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் பட்டியலுடன் அதற்கான நிதியும் வழங்கப்படும் பட்சத்தில் பொறியியற் சேவை அமைச்சின் கீழ் தற்போது இயங்கும் பாடசாலை வேலைப்பகுதியினர் அவற்றை கூடிய விரைவாக நிறைவேற்றுவாரென குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேவைப்படும் கட்டடப் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வரவும் மேற்படி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி வேலைகளுக்கான புதிய வங்கிக் கணக்கு நிர்மாண திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கான அங்கீகாரம் கிடைத்ததும் யாழ். மாவட்ட பாடசாலை கட்டட வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

---

தென்மராட்சிப் பகுதி

# இலக்கிய கர்த்தாக்கள் பற்றிய ஆவணத் தொகுப்பு தயாரிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 26

தென்மராட்சிப் பகுதியிலுள்ள இலக்கிய கர்த்தாக்கள் மற்றும் படைப்பாளிகள் போன்றவர்களின் உள்ளடக்கிய ஆவணத்தொகுப்பு தயாரிப்பதற்கான முயற்சியில் அறவழி இலக்கியப் பேரவை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுவினரின் ஏற்பாட்டில் அறவழிப் பயிலகத்தில் நடைபெற்ற அறவழி இலக்கியப் பேரவையின் கூட்டத்திலே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

இந்த ஆவணத்தொகுப்பு தொடர்பான விவரங்கள் தென்மராட்சி பகுதியிலுள்ள அறுபது கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இத்தொகுப்பு வெற்றிகரமாக நிறைவுபெற இப்பகுதியிலுள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள் தங்கள் வெளியீடுகளின் இருபிரதிகளையும் தங்களைப் பற்றிய விவரங்களையும் அறவழிப் போராட்டக் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

---

# 2,059 ஹெக்டேர் பரப்பில் சிறு தானியச் செய்கை

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடையைத் தொடர்ந்து இரண்டாயிரத்து 59 5 ஹெக்டர் பரப்பில் மறு வயல் பயிர்களாக சிறுதானியச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூர், சண்டிலிப்பாய், உடுவில், கீரிமலை, தொல்புரம், புத்தூர், உரும்பிராய், கைதடி, சாவகச்சேரி, புலோலி, அம்பன், கரவெட்டி, பளை ஆகிய விவசாய போதனாசிரியர் பகுதிகளில்—

பயறு-504.5, கௌபீ-406, உழுந்து-162 5, நிலக்கடலை-08, எள்ளு-707, சணல்-271 5 ஹெக்டேர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

(த-162)

---

## புலிகளின் குரல் வானொலியில்

26-04-1994

செவ்வாய் இரவு

- ★ 8-01 — ''ஊர் சுற்றும் ஒலிவாங்கி''
- ★ 8-10 — ''அறிந்து கொள்ளுங்கள்'' — தகவல் களஞ்சிய நிகழ்ச்சி
- ★ 8-20 — நலந்தானா?— இன்றைய சூழ்நிலையில் முதலுதவிகள் அவசியம் பற்றிய சில அறிவுரைகள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— ''மிரட்டல்''
- ★ 8-50 — தந்தை செல்வா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''கொண்ட கொள்கை தவறாத தந்தை செல்வா''

27-04-1994

புதன் காலை

- ★ 7-02 — மாவீரர் வணக்கம்.
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தொடர்ந்து நீங்கள் கேட்டவை.

---

# மோசமான நிலையில் அகதி முகாம்

நவாலி தெற்கு அரசடி அகதி முகாம் கவனிப்பாரற்று மோசமான நிலையில் காணப்படுகிறது.

குறிப்பிட்ட காலம் கடந்தும் கூரைகள் வேயப்படாததால் அங்குள்ளவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

மழை பெய்வதால் அகதிகளின் வீடுகள் மேலும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன.

மழை பெய்யும் போது மக்கள் வேறு இடங்களுக்கு ஓட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (ஒ- 15)

---

# பஸ் நடத்துநர் ஜப்பானின் புதிய பிரதமரானார்!

டோக்கியோ, ஏப். 26

பஸ் நடத்துநராக பணிபுரிந்து அரசியல்வாதியாக மாறிய திரு. சுட்டோமஹட்டா ஜப்பானின் புதிய பிரதமராக நேற்று தெரிவுசெய்யப்பட்டார்.

58 வயதான இவர், தற்போது ஆட்சியிலுள்ள ஆறு கட்சிக் கூட்டணியின் இரண்டாவது பிரதமராக பதவி வகிக்க இருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் ஜப்பானின் ஆறாவது பிரதமராக இவர் இருக்கிறார்.

ஊழல் புகார் காரணமாக பதவி விலகிய திரு: ஹொசாகாவின் இடத்தை இவர் நிரப்புகிறார்.

புதிய பிரதமரைத் தெரிவு செய்ய ஜப்பானிய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் திரு. ஹட்டாவுக்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன.

ஹொசாகாவின் அமைச்சரவையில் இருந்த பலர் தமது அமைச்சரவையில் இடம்பெறுவார்கள் என்று புதிய பிரதமர் தெரிவித்தார்.

(ஒ-எ)

---

# தாயகம் திரும்பியோருக்கு ரூ. 4 ஆயிரம் நன்கொடை

## தொழில் முயற்சிக்காக

யாழ்ப்பாணம், ஏப். 26

தமிழகத்தில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ள அகதிகளுக்கு தொழில் முயற்சிக்கான நன்கொடையாக நாலாயிரம் ரூபா வழங்கப்படவிருக்கிறது.

புனர்வாழ்வு அமைச்சில் இருந்து இது தொடர்பான அறிவிப்பு யாழ். செயலகத்துக்கு கிடைத்துள்ளதாக அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

அத்துடன் அவர்களுக்கு உலர் உணவு நிவாரணமும் வழங்க பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

(த-3)

---

# குடி தண்ணீர் இல்லாது பாஷையூர் மக்கள் அவதி!

தற்போதைய கடும் வரட்சியால் பாஷையூர் பகுதியில் குடிதண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

பாஷையூரில் தற்பொழுது ஒரு நன்னீர் குழாய்க் கிணறு மூலமாகவே மக்கள் குடிதண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

இதன் காரணமாக பெருமளவு மக்கள் போதியளவு தண்ணீரை பெற முடியாமல் தூர இடங்களுக்குச் சென்று தண்ணீரை எடுத்து வருவதாகவும்—

இதனைக் கருத்தில் கொண்டு யாழ். மாநகரசபையினர் பவுசர் மூலம் நன்னீரை பாஷையூர் பகுதிக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாஷையூர் புனித அந்தோனியார் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலையம் கோரியுள்ளது. (த- 17)

---

# விவசாயிகள் ஓய்வூதியம்; சலுகைகழிவுவீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

கமத்தொழில் காப்புறுதிச் சபையின் விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் புதிதாகச் சேர்ந்து கொள்பவர்களில் தவணைக் கட்டணம் முழுவதையும் ஒரே தடவையில் செலுத்துபவர்களுக்கு வழங்கப்படும் சலுகைக் கழிவு வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் புதிய கழிவு வீத அதிகரிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக கமத் தொழில் காப்புறுதிச் சபையின் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இதற்கமைய 1-1-94 இற்கு முன்னர் 18 வயதில் இத்திட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் 50 வீத கழிவுடன் மொத்த தவணைப்பணமாக 5 ஆயிரத்து 460 ரூபா செலுத்த வேண்டி இருந்தது.

ஆனால் இப்புதிய திட்டத்தின் கீழ் 1-1-94இன் பின்னர் இணைந்து கொண்டவர்கள் 75 வீத கழிவுடன் 2 ஆயிரத்து 720 ரூபா கட்டினால் போதுமானது. (த-162)

---

வெளிநாட்டு கடிதங்களில் கையாடல்;

# தபால் சேவகர்கள் 34 பேர் இடைநிறுத்தப்பட்டனர்

கொழும்பு, ஏப். 26

உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடிதங்கள், பொதிகளைக் கையாடல் செய்த சம்பவங்கள் தொடர்பாக 34 தபால் சேவகர்கள் சேவையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

மேலும் தொண்ணூறு தபால் சேவகர்கள் விசாரணைக்குட்டுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோசடிகள் குறித்து 300க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் தபால் திணைக்களத்துக் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-எ-6)

---

தற்கொடையாளிகளின் தியாகத்தால்

# எதிரியின் மனோபலத்தைத் தகர்த்து வெற்றியின் விளிம்பில் தமிழர்!

## அன்னை பூபதி நினைவுக் கூட்டத்தில் இளம்பரிதி உரை

சாவகச்சேரி, ஏப். 26

எமது தமிழீழப் போராட்டம் உலகத்தில் புதிய அடித்தளத்தை, சரித்திரத்தை, சாதனை—ய, புதிய கோட்பாடுகளை உருவாக்கியிருக்கின்றது. இன்று நாம் எமது போராட்டப் பாதையில் வெற்றியின் விளிம்பில் நிற்கின்றோம். இதற்கு காரணமானவர்கள் எமது மண்ணில் உலாவிய மாவீரர்கள், தங்களை தற்கொடையாக்கிய தியாக மக்கள், அவ்வாறே அன்னை பூபதியின் மாபெரும் தியாகம் அமைந்தது.

மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையில் அண்மையில் நடைபெற்ற அன்னை பூபதியின் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது;

180 நாடுகள் உள்ள உலகில் எதிர் காலத்தில் 360 நாடுகள் உருவாகும். இது தவிர்க்க முடியாதது. இக்காலகட்டத்தில் எமது தமிழீழமும் மலரும்.

எனவே மக்கள் எதிரியின் மாற்றுக் கருத்துக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் செவிசாய்க்காமல் இருக்க வேண்டும். ஸ்ரீலங்கா அரசு எம்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

ஆனால் நாம் மனவலிமையினால் எதிரியை உடைத்து நிற்கின்றோம். இச் சூழலில் மக்களின் எழுச்சி, பங்களிப்பு என்பன இருந்தால் நாம் வெற்றி பெறுவோம். என்றார்.

நினைவஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் - பொன். தியாகம், பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் தமிழ்கவி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

கூட்டம் சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் திரு பொற்கோ தலைமையில் நடைபெற்றது ஈகைச்சுடரை யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் - திரு. இளம்பரிதி அவர்கள் ஏற்றி வைத்தார் அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலியும் மறைந்த மாவீரர்கள், பொதுமக்களுக்கு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (த-31)

---

## மிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ். செயலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருந்த விலங்கு வேளாண்மை அபிவிருத்திக் குழுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சங்கானை பாடசாலைகளில் குழாய்க் கிணறுகள்

அராலி, ஏப். 26

சங்கானை கல்விக் கோட்ட பகுதிக்குட்பட்ட ஏழு பாடசாலைகளில் குழாய்க் கிணறுகள் அமைக்கப் படவுள்ளது. குடி நீர் வசதியற்ற துணைவி அ.மி.த கலவன் பாடசாலை, அராலி வள்ளியம்மை வித்தியாசாலை, மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை, வட்டு- திருஞானசம்பந்த வித்தியாசாலை, வட்டு- இந்துக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம், சங்கானை சைவப் பிரகாச மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே குழாய்க் கிணறுகள் அமைக்க கோட்டக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்,

(எ-12)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப். 25

பளை மகா வித்தியாலய சாரணர்கள் பளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த 11 ஆம் திகதி சிரமதான பணியை மேற்கொண்டனர். இதில் சாரண ஆசிரியர் திரு சி. விக்கினேஸ்வரன் தலைமையில் 40 சாரணர்கள் பங்கு கொண்டனர். (ந)

## பாரதிபுரத்தில் கோழி வளர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்து அன்றாடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கிலான கிளி - கோட்டத்திலுள்ள பாரதிபுரத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியினரால் 15 பயனாளிகளுக்கு தலா 20 கோழிக்குஞ்சுகள் வீதம் 3 ஆயிரம் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்ட கோழிக்குஞ்சுகள் உரிய காலத்தில் மீளப்பெறப்பட்டு மேலும் 16 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. மேற்படி குஞ்சுகளாவற்றிற்கும் தடுப்பூசி போடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## கோழிகளுக்கான தடுப்பூசி மருந்து

யாழ்ப்பாணம், ஏப்.26

கோழிகளைப் பாதிக்கும் அம்மை மற்றும் வெள்ளை நோய் போன்றவற்றை தடுக்கும் அம்மைப்பால் ரனிக்கற் ஆகிய தடுப்பூசி மருந்துகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் காமதேனு விவசாயப் பண்ணை மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட இத்தடுப்பு மருந்துகளைப் போடுவதன் மூலம் கோழிகளுக்கு இந்நோய் பரவ மை தடுக்க முடியும்.

(ந)

## விற்பனை நிலையம்

வடமாராட்சி, ஏப். 26

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் வர்த்தக திணைக்களத்தின் விற்பனை நிலையம் ஒன்று மே மாத இறுதியில் வல்வெட்டித்துறையில் திறந்து வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-173)

## இரவு நேர ரோந்து

வல்வெட்டித்துறை, ஏப் 26

வல்வெட்டித்துறை வீதிகளில் தமிழீழக் காவல்துறையினர் இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது

(எ—155)

## ஏழாலையில் மரநாய்கள் தொல்லை

யாழ்ப்பாணம், ஏப் 26

ஏழாலைப் பகுதிகளில் மரநாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. மரநாய்கள் கோழிகளைப் பிடித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது (இ- 5)

---

இயற்கை எம் உடைமை - அதை காப்பது நம் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான வீரசங்க சன சமூக நிலையம்
கோண்டாவில்
பொன்விழா அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு
முடிவுகள்
1933 — முதலாம் பரிசு
2349 — இரண்டாம் பரிசு
0128 — மூன்றாம் பரிசு
3091 — நான்காம் பரிசு
(30608)

மாருதி வீடியோ விஷன்
பிரசாந், சிவரஞ்சனி நடித்த
ராசாமகன்
(ORIGINAL பிரதி)
முன்னணி நடிகர்களின் புதிய 5 திரைப் படங்கள் தணிக்கையின்பின் வெளியாகும்.
புதிய திரைப்படப் பாடல்கள் CD இல் இருந்து (COMPACT DISC) பதிவு செய்து தரப்படும்.
வீடியோ ஓடியோ போட்டோஸ்ரட் தேவைகளுக்கு
மாருதி வீடியோ விஷன்
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
(சி/7932)

மிக விரைவில்......
உங்கள் கண்ணெதிரில்.....
போராளிகளும், மக்களும் இணைந்து வழங்கும்
நிதர்சனம் நிறுவனத்தின்
சிறப்பு வெளியீடு
காற்று வெளி
தரமான கலைப் படைப்பின் திறமான கருத்தோவியம்
★ மக்களோடு புலிகள்
★ சண்டைக் காட்சிகள்
★ நெஞ்சை உருக்கும் சம்பவங்கள்
உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள்
மறவாதீர்கள் காற்று வெளி
தவறாதீர்கள் பார்த்து மகிழ
இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு
(சி-8029)

## மரண அறிவித்தல்கள்

### மருதப்பு சுப்பிரமணியம்

முன்னைநாள் மாநகரசபை பிரபல சந்தைக் குத்தகையாளரான மருதப்பு சுப்பிரமணியம் கொழும்பில் காலமானார்.

இவர் திருமதி பரமேஸ்வரி (பூமணி) அவர்களின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி (கனடா), சாரதாதேவி, விமலாதேவி (கனடா) விஜயலோசினி ஜேர்மனி), குமரேசன் (கனடா), ஞானநாதன் (ஜேர்மனி), லோகநாதன் (ஜேர்மனி), மதுரவதனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தராசா (கனடா), பத்மநாதன் (வலி கிழ. பிர. சபை கோப்பாய்), திலகசுந்தரம் (கனடா), பாலச்சந்திரன் ஜேர்மனி) ரஞ்சி (கனடா), கலா (ஜேர்மனி), றூபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிந்தன், சுபன், செனிகா, நிறஞ்சன், சாவியா, கார்த்திகா, சினோஜன் ஆகியோரின் பேரனும் இரத்தின சபாபதியின் மைத்துனரும், மகேஸ்மணி செல்லம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
பத்மநாதன்
(மருமகன்)

3ஆம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்
[30605]

### திருமதி திரவியம் தியாகராசா

சுதுமலை வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட திரவியம் தியாகராசா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தபால் அதிபர் வே தியாகராசாவின் (J.P) அன்பு மனைவியும், மங்கையற்கரசி, ஜெயக்குமார், செல்வகுமார் ஆனந்தகுமார், கிருஷ்ணகுமார், அருந்ததி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஈஸ்வரியின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற ராசமணி, மனோன்மணி, செல்வநாயகம், திலகவதி ஆகியோரின் சகோதரியும், குமரேஸ்வரி, லலிதா, ஷீலா, சிவரஞ்சினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் 3 மணியளவில் பப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்

''லக்சுமி வாசா'',
இணுவில் றோட்,
சுதுமலை வடக்கு
(30609)

கறுப்பின மக்களின் 400 ஆண்டுகால அடிமை வாழ்வு முடிவு

# தென்னாபிரிக்காவில் இன்று முதலாவது சுதந்திரத்தேர்தல்

## மீண்டும் தலைநகரில் இரண்டாவது பெரும் குண்டுவெடிப்பு

தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் கடந்த நானூறு ஆண்டு கால அடிமை வாழ்வினை முடிவுக்குக் கொண்டு வருவதை உறுதி செய்யும் முதலாவது பொதுத் தேர்தலில் தென்னாபிரிக்க மக்கள் இன்று வாக்களிக்கவுள்ளனர்.

நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை நடைபெறும் இத்தேர்தல் இலங்கை நேரப்படி இன்று காலை 10 30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

27 கட்சிகள் போட்டியிடும் இத்தேர்தலில்

400 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை தேர்ந்தெடுக்கவும் —

தற்போது உள்ள ஒன்பது மாநிலங்களுக்கான அரசுகளைத் தேர்ந்தெடுக்கவும் மக்கள் வாக்களிக்கவுள்ளனர்.

சுமார் நானூறு ஆண்டு கால வெள்ளை இன ஆட்சி முடிவு பெறுவதை உறுதி செய்யும் இத்தேர்தலில் சுமார் 2 கோடி 70 லட்சம் பேர் வாக்களிப்பர்.

இதேவேளை —

ஜோஹனஸ் பேர்க் நகரில் நேற்று இரண்டாவது தடவையாக இடம் பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கறுப்பின மக்கள் 10 பேர் உயிரிழந்தனர் 36 பேர் காயமடைந்தனர்.

தேர்தலை எதிர்க்கும் வெள்ளை நிறவெறி கும்பல் ஒன்றே இந்தக் குண்டு வெடிப்புகளுக்குக் காரணம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் கறுப்பின வேட்பாளர் ஒருவர் உட்பட 9 பேர் உயிரிழந்ததும், 90 பேர் வரை காயமுற்றதும் தெரிந்தவையே.

## புதிய ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலா?

தென் ஆபிரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் நெல்சன் மண்டேலா தலைமையிலான ஆபிரிக்க தேசியக் காங்கிரஸே மகத்தான வெற்றியை ஈட்டப் போகிறது என்று சகல கருத்துக் கணிப்புகளும் தெரிவித்துள்ளன.

ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் புதிய நாடாளுமன்றம் புதிய ஜனாதிபதியை அடுத்த மாதம் 6 ஆம் திகதி தெரிவு செய்யும்.

புதிய ஜனாதிபதி அடுத்த மாதம் 10 ஆம் திகதி பதவி ஏற்பார்.

அநேகமாக புதிய ஜனாதிபதியாக நெல்சன் மண்டேலாவே தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ)

காமினி திஸநாயக்காவுக்கு முன்பதாக

# தென்மாகாணத்தில் 2 பேருக்கு அமைச்சர் பதவி வழங்குக!

## ஐ. தே. க. கிளைக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஏப். 26

காமினி திஸநாயக்காவை அமைச்சராக்குவதற்கு முன்னர் தென் மாகாணத்தைச் சேர்ந்த இருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடத்துக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் தென் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றி வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்த நடவடிக்கை அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறும் தீர்மானம் ஒன்று தென் மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.எஸ். அமரசிறியின் தலைமையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டம் திரு. அமரசிறியின் வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

காமினி திஸநாயக்காவை எம் பியாக்கும் நடவடிக்கையைப் பல உறுப்பினர்கள் விரும்பவில்லை என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்துக்குத் தலைமை வகித்த எம். எஸ். அமரசிறி 1988 ஆம் ஆண்டு வரை அமைச்சராக இருந்தவர். பின்னர் தென்மாகாண சபைக்கு ஐ.தே.க. சார்பில் போட்டியிட்டு மாகாணசபை முதல்வராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்.

அதன் பின்பு நடந்த—தென் மாகாண சபைக்கான—இரு தேர்தல்களிலும் அவரது கட்சிகள் மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை.

இதனால் மாகாணசபை முதல்வராக வரும் வாய்ப்பை இழந்த எம்.எஸ். அமரசிறி இப்போது மீண்டும் ஐ.தே.க. அரசாங்கத்தில் அமைச்சராக வர விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## மே நாள் எழுச்சி வீதி நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 26

மே தினத்தை இவ் வருடமும் எழுச்சிகரமாக முன்னெடுக்கும் நோக்கத்துடன் மே நாள் எழுச்சி வீதி நாடகங்களை கலை பண்பாட்டுக் கழகத்தினரும், கிராமிய உழைப்பாளர் சங்கத்தினரும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தி வருகின்றனர்.

அனைத்து ஒழுங்கு முறைகளின் தலை நீக்கத்தை தமிழீழ தேசிய விடுதலையே உறுதி செய்யும் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டே இந்த நாடகங்கள் நடத்தப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. [உ]

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா நேர்முகப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பெறும் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு விண்ணப்பித்த யாழ்ப்பாணக் கல்வி வலயம்-2 ஐச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை புதன்கிழமை பி. ப. 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

விண்ணப்பித்த ஆசிரியர்கள் தங்கள் அடையாள அட்டை, முதல் நியமனக் கடிதம், பிறப்புச் சான்றிதழ், கல்வித் தகைமைச் சான்றிதழ் பாடசாலை அதிபரின் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகை தருமாறு கேட்கப்படுகின்றனர்.

## பற்சிகிச்சை வைத்தியர்களுக்கு அழைப்பு

யாழ். போதனா வைத்திய சாலையில் 26 . 4 . 1994 தொடக்கம் பயிலும் வைத்திய உத்தியோகத்தர்களாக (Intern Medical Officer) வருவதற்கு விண்ணப்பித்தோர் இன்று காலை 8 மணிக்கு தம்மைச் சந்திக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி என். கனகரட்டினம் கேட்டுள்ளார். (உ-எ)

புலிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய சர்ச்சையாக தோன்றியது ஏன் என்பது பற்றி தனக்கு ஒன்றுமே விளங்கவில்லை என்று கூறியிருப்பதும் அவ்வட்டாரங்களினால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனிடையில் விடுதலைப் புலிகள் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகள் நீடிக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று, முதலமைச்சர் ஜெயலலிதாவால் முன்மொழியப்பட்டு தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே. (உ-எ)

செல்வா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரஞ்சலி செலுத்துவர். அதன் பொருட்டு இன்று காலை பலர் நினைவாலயத்தில் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நினைவாலயத்தைச் சுற்றி வர வளர்ந்திருந்த முட்புதர்கள் நேற்றுக் காலை யாழ். மாநகர சபையினரால் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டது.

அதனால் எவரும் சிரமமின்றி நினைவாலயத்துக்கு இன்று செல்ல முடியும்.

திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
கலை நிலா அரங்கு
மாதாந்தப் பாடல், கிற்றார் இசை
சிறப்பு நிகழ்ச்சியாக
அருட் கரம்
(மன்னார் பாங்கு நாட்டுக்கூத்து)
இன்று 26-04-1994 மாலை 6 45 மணி
மன்ற அரங்கில்
* அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் *
(ஆசனப் பதிவு உண்டு)
- திருமறைக் கலா மன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-7923]

தமிழக சட்டசபையிலிருந்து

# எதிரணி உறுப்பினர் இருவர் வெளியேற்றப்பட்டனர்.

சென்னை, ஏப். 26

தி.மு.க. உறுப்பினர் திரு. பரிதி இளம் வழுதியும், எம் ஜி ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசும் நேற்று சட்டப்பேரவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தக் கூட்டத் தொடர் முழுவதிலும் இருந்து அவர்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

காவல்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முதல்வர் ஜெயலலிதா பதிலளித்து உரையாற்றிய பின்னர்—

ராயபுரம் ஏழுமலை கொலை வழக்கை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்க வேண்டும் என்று திரு. பருதி இளம் வழுதி வற்புறுத்தினார். இது தொடர்பாக அவர் கூறிய கருத்துக்களை ஆளும் கட்சியினர் கடுமையாக ஆட்சேபித்தனர்.

அச்சமயம் தமது கட்டளையை ஏற்று அமர மறுத்த பரிதி இளம் வழுதியை அவையிலிருந்து வெளியேற்றுமாறு சட்டப் பேரவைத் தலைவர் திரு.சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டார்.

பேரவையில் நேற்று கேள்வி நேரம் முடிந்ததும்—

ஈரோடு நகரில் எம். ஜி ஆரின் சிலையை காவல்துறையினர் கைப்பற்றியது தொடர்பான பிரச்சினையை சிறப்பு கவன ஈர்ப்பாக திருநாவுக்கரசு எழுப்பினார்.

கடந்த ஜூலை மாதத்தில் இருந்து பல இடங்களில் — ஏதாவது ஓரிடத்தில் — அந்த சிலையை வைப்பதற்கு அனுமதிகளைக் கோரியிருந்தும் அந்தச் சிலையை எந்த இடத்தில் வைப்பதற்கும் அதிகாரிகள் அனுமதி தரவில்லை என்றும் —

கடந்த 23 ஆம் திகதி எந்த முன்னறிவிப்பும் இன்றி அந்தச் சிலையை பொலீஸார் தனியார் இடத்தில் புகுந்து சட்ட விரோதமாகக் கைப்பற்றினர் எனவும் திருநாவுக்கரசு அப்போது குற்றஞ்சாட்டினார்.

தொடர்ந்து அவர் கூறிய கருத்துக்களை அமைச்சர்களும், ஆளும்கட்சி உறுப்பினர்களும் ஆட்சேபித்த போது அவையில் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

அப்போது இடம்பெற்ற வாக்குவாதத்தைத் தொடர்ந்து திருநாவுக்கரசை அவையிலிருந்து வெளியேற்றுமாறு அவைக் காவலர்களுக்கு பேரவைத் தலைவர் உத்தரவிட்டார். (உ-5)

## மத்திய அரசு மீது ஜெயலலிதா குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 26

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் விஷயத்தில் எங்களை ஓட விட்டு தங்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இந்திய மத்திய அரசு நடந்து கொள்வதாக முதலமைச்சர் ஜெயலலிதா குற்றஞ்சாட்டினார்.

அண்மையில் தமிழ்நாடு சட்டசபையில் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். (உ-எ)

# வேளாங்கண்ணி ஆலயத்தை தகர்ப்பதாக எச்சரிக்கை

## முழுப்பாதுகாப்புக்கு உத்தரவு

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தை தகர்க்கப் போவதாக அச்சுறுத்தப்பட்டுள்ளது.

இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் தேவாலயத்தைத் தகர்க்கப்போவதாக தெரிவித்திருப்பதாக முறையிடப்பட்டிருப்பதை அடுத்து—

அந்தத் தேவாலயத்துக்கு முழுப்பாதுகாப்பு அளிக்கப்படும் என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

வேளாங்கண்ணி தேவாலயம் உட்பட எந்த வழிபாட்டுத் தலத்துக்கும் சிறு தீங்கு நேர்வதற்கும் அரசு அனுமதிக்காது என்றும் —

மத ஒற்றுமையை பேணுவதிலும் வகுப்புவாத உணர்வைத் தூண்டிவிடுவோரை ஒடுக்குவதிலும் மாநில அரசு உறுதி பூண்டுள்ளது என்றும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று சட்ட சபையில் தெரிவித்தார். (உ-5)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஏப் 26

உரும்பிராய் கிழக்கு- கோப்பாய் — நீர்வேலி — திருக்கரந்தனூர் அருள்மிகு சிவபூதநாதேஸ்வர சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

பகோற்சவ நாட்களில் செஞ்சொற்சிரானன் த சிவகுமாரன் ''மகாபாரதம்'' தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (அ)

## நாளை

நாளை புதன்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் நகரசபை செயலாளர் சி. நடராசா தலைமையில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் ''மருந்தில்லா மருத்துவம்'' என்னும் பொருளில் யாழ்ப்பாணம் சமூகத்துறை சுகாதார விரிவுரையாளர் திரு. கதிர்காமத்தம்பி ஜெகநாதன் கருத்துரை வழங்கவுள்ளார். (ஜ-31)

★ ★ ★

கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கும் சேவைக் கால முதன்மை ஆசிரியர்களுக்குமான கூட்டம் அதியார் இந்துக்கல்லூரியில் நாளை புதன்கிழமை ப.பி. 2 மணிக்கு நடைபெறும் என்று பிரதிப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் அறிவித்துள்ளார். (உ-எ)

★ ★ ★

சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலின ஏற்பாடுகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ- 152]

## கொழும்பில் பாக். பிரஜை கைது

கொழும்பு, ஏப். 2

103 கிலோ ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்குள் கடத்தி வர முற்பட்ட பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கொழும்பு விமான நிலையத்தில் கடந்த வியாழன் காலை சுங்க அதிகாரிகளிடம் பிடிபட்டார். [த-5]

## ஊழலை விசாரிக்க கோரிக்கை

கொழும்பு, ஏப். 26

மாத்தளை மாநகர மேயருக்கு எதிரான ஊழல் குற்றச் சாட்டுக்களை விசாரிக்க ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு மத்திய மாகாண முதலமைச்சருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை உறுப்பினர் ஒருவரே இக் கோரிக்கையை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [த-எ-6]

கடற்கரைக்......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

''புதிய படையில் 300க்கு மேற்பட்ட காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். அவர்களுக்கு சக்திவாய்ந்த ஆயுதங்களும் வாகனங்களும் வழங்கப்படும்.

''இந்த ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டத்துக்கு 12 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. — இவ்வாறு தமிழக முதல்வர் மேலும் தெரிவித்தார்.

ஆவடிக்கு அருகே 20 கோடி ரூபா செலவில் காவல்துறைப் பயிற்சிக் கழகம் ஒன்று நிறுவப்படும் என்றும் —

தீவிரவாதத்தை முறியடிக்க உயர்தரப் பயிற்சி, பொலீஸாருக்கு பயிற்சிக் கழகத்தினால் வழங்கப்படும் என்றும்–

சென்னை நகரில் பணிபுரியும் காவலர்களுக்காக 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்புகளைக் கொண்ட ''காவலர் நகர்'' ஒன்று உருவாக்கப்படும் என்றும் — அவர் மேலும் சொன்னார். (உ-எ)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) ... 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 26 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org